**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களில் (KFD) ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.
உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com இணையதளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும். அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் | வாடிக்கையாளர்களிடம் இருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள்/அறவீடுகள்/கமிஷன்/வட்டி | வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| • நேஷன்ஸ் சம்பள சேமிப்புக் கணக்கு<br><br>- நேஷன்ஸ் சம்பள சேமிப்புக் கணக்கின் கீழ் வாடிக்கையாளர்கள் தங்களின் சம்பளப் பணத்தை நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கிக்கு அனுப்புவதன் மூலம் பல்வேறு நன்மைகளை அனுபவிக்கலாம்.<br><br>• இதன் மூலம் ஒரு சேமிப்புக் கணக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட நடைமுறைக் கணக்கு ஒன்றைத் தொடங்கவும் வாய்ப்பு உள்ளது. | • டெபிட் கார்ட் - நேஷன்ஸ் ஷாப்பிங் டெபிட் கார்ட் வசதி.<br><br>• நிலையான அறிவுறுத்தல் தயார்படுத்தல் ஒன்று இலவசம்.<br><br>• டிஜிட்டல் வங்கி வசதிகள் - சேரும் கட்டணம் அல்லது வருடாந்தக் கட்டணம் எதுவுமின்றி இணையம் மற்றும் மொபைல் வங்கி வசதிகள். | • பராமரிப்புக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.<br><br>• குறைந்தபட்ச சம்பளத்தின் தேவையின் படி மாதாந்த சம்பளத்தை அனுப்பாத வாடிக்கையாளர்களிடமிருந்து மாதாந்தம் சம்பளத்தை அனுப்பாதமைக்கான கட்டணம் அறவிடப்படும்.<br><br>***NSS சம்பளம்: ரூ. 10,000/-க்கும் குறைவாக சம்பளம் அனுப்பப்படும் பட்சத்தில் ஒரு மாதத்துக்கு ரூ. 250/- அறவிடப்படும்.*** | • பொதுவான வியாபார நிபந்தனைகள் மற்றும் (முறையாக கையொப்பமிடப்பட்ட) MIS படிவம் ஆகியவற்றுடன் நியம கணக்குத் திறப்பு ஆணையை (mandate) பூர்த்தி செய்து பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு நேஷன்ஸ் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>• உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட சம்பளச் சீட்டு வழங்கப்படாவிட்டால், மொத்த சம்பளத்தின் விவரங்களைத் தெளிவாகக் குறிப்பிடும் சம்பள உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட வேண்டும்.<br><br>• இந்த ஆவணத்தில் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரையை இட்டு தொழில் தருனர் கையொப்பமிட வேண்டும்.<br><br>• தேசிய அடையாள அட்டையின் பிரதி (வெளிநாட்டு கடவுச்சீட்டு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன். செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டையுடன் மட்டுமே ஒரு | **தகைமை பெறுவதற்கான வரையறைகள்:**<br><br>• தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.<br><br>• விண்ணப்பதாரர் உத்தியோகம் பார்ப்பவராக இருக்க வேண்டும் என்பதுடன் அவரது வழக்கமான மொத்த சம்பளம் ரூ. 20,000 ஆகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.<br><br>• விண்ணப்பதாரர் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்பவராக மற்றும்/அல்லது ஒரு தகைமை பெற்ற ஒரு தொழில்வல்லுனராக (உதா: CIMA, ACCA, CIM, IESL, கட்டடக் கலைஞர், ICA, CFA, மருத்துவக் கவுன்சிலில் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருத்துவர் அல்லது அதற்கு சமமான வேறு தகைமைகளை உடையவர்) மற்றும்/அல்லது ஓய்வூதியம் பெறும் அரசு ஊழியராக மற்றும்/அல்லது ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்பவராக இருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கணக்கை ஆரம்பிக்க முடியும்)<br><br>• ஆணையில் (mandate) குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர முகவரியை உறுதிப்படுத்த, மின் அல்லது நீர்க் கட்டண பில்/வங்கி கணக்குக் கூற்று /வரி மதிப்பீடு/உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கடிதம் (கடந்த 3 மாதங்களுக்குள் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)<br><br>• விண்ணப்பதாரர் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு பங்களிப்பு செலுத்தாதவராக இருந்தால், அவர் முழுநேரம் கடமையாற்றுகின்ற தகைமை பெற்ற ஒரு தொழில் வல்லுனராக (உதா: CIMA, ACCA, CIM, IESL, கட்டடக் கலைஞர், ICA, CFA, மருத்துவக் கவுன்சிலில் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருத்துவராகவோ அல்லது அதற்கு சமமான வேறு தகைமைகளை உடையவராகவோ) இருத்தல் வேண்டும். | **ஏனைய தகவல்கள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**<br><br>• குறைந்த பட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 2,000/- ஆக இருக்க வேண்டும் (எவ்வாறிருப்பினும் சம்பளம் அடுத்த 30 நாட்களுக்குள் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்)<br><br>• பின்வரும் முறையில் நேஷன்ஸ் சம்பள சேமிப்புக் கணக்கில் சம்பளம் வரவு வைக்கப்படலாம்;- தொழில்தருனரால் ஒரு SLIP மாற்றல்/கணக்கில் வரவு வைப்பதன் மூலம் அல்லது (கணக்கு வைத்திருப்பவரின் பெயர்) 'முகாமையாளர், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி' என்ற பெயரில் வரையப்பட்ட காசோலையை வைப்பில் இடுவதன் மூலம் அல்லது அடுத்த 30 நாட்களுக்குள் பிரிதொரு வங்கிக் கணக்கிலிருந்து பெறப்பட்ட நிலையான உத்தரவு மூலம்.<br><br>• இலவசமாக ஏடிஎம்களில் இருந்து வரையறையற்ற பணம் எடுக்கும் நன்மையைத் தவிர, நடைமுறைக் கணக்குகளுக்கு அமுலில் இருக்கும் தனிப்பட்ட நடைமுறைக் கணக்கின் அதே சிறப்பம்சங்கள் உண்டு.<br><br>ஒரு நடைமுறைக் கணக்கைத் திறப்பது ஒரு விருப்பத் தெரிவாகும். மேலதிகப் பற்று வசதியைப் பெறுவதற்கு, நேஷன்ஸ் சம்பள சேமிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நடைமுறைக் கணக்கு ஒன்றைத் திறப்பது கட்டாயமாகும். பொதுவான தனிநபர் நடைமுறைக் கணக்கைத் திறக்கும் நடைமுறை ஏற்புடையதாகும்.<br>• நேஷன்ஸ் சம்பள சேமிப்பு நடைமுறைக் கணக்கை மட்டும் திறக்கும் தெரிவு வாடிக்கையாளர்களுக்கு கிடையாது.<br>• நேஷன்ஸ் சம்பள சேமிப்புக் கணக்கில் தொடர்ந்து 3 மாதங்கள் சம்பளம் வரவு வைக்கப்படாவிட்டால், நேஷன்ஸ் சம்பள சேமிப்பு நடைமுறைக் கணக்கின் அனுகூலங்கள் நிறுத்தப்படும். |

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் சம்பள சேமிப்புக் கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions.pdf. இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

- இந்த வங்கியானது, ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஒர் உறுப்பினராகும்.

- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.